13th September 1958]

தாக சொன்னார்கள். இதற்காக அவர்களுடைய சீப் இஞ்சினீயரை கேட்டு முடிவு செய்யலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதற்காக நாம் அவர்களை பாராட்டவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri K. ANBAZHAGAN : கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரைத் தெற்கே கொண்டுவரவேண்டுமென்று முயற்சிக்கின்றபோது, கோதாவரி, கிருஷ்ணா நதிகளில் பெரு வெள்ளம் காரணமாக அங்குள்ள மக்கள் மிகவும் துன்பத்தில் இருப்பதால் இனிமேல் இவைகளைத் தடுக்க உடனடியாகச் சில திட்டங்களை போட்டு நிறைவேற்றுகிற இந்த நேரத்தில் அந்தத் திட்டங்களிலே கலந்து கொள்ள நமது சர்க்கார் முயற்சிக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : இந்த சமயத்திலே பேசுவது என்பது நல்லதல்ல. ஏற்கெனவேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆபத்தில் இருக்கும் சமயத்தில் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லுவது நல்லதல்ல.

* 222 Q.—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to Question No. 16 answered on 27th June 1957, the present stage of the proposal to utilize the waters of the Godavari river for irrigation purposes in this State?

The Hon. Sri P. KAKKAN : The question of utilization of the waters of the Godavari and the Krishna for the benefit of the State was generally discussed and the matter was referred to the Chief Engineer, Andhra Pradesh, for a preliminary technical report. On receipt of that report the Zonal Council will consider the matter again.

Electric motors

* 223 Q.—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எத்தனை விவசாய மின்சார மோட்டார்கள் 1958-ஆம் ஆண்டில் பெறுவதற்காக அரசாங்கம் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது ?

(ஆ) உள் நாட்டு உற்பத்தி மூலமாக எத்தனை விவசாய மின்சார மோட்டார்கள் கிடைக்கலாம் ?

(இ) இறக்குமதி மூலமாக எத்தனை விவசாய மின்சார மோட்டார்கள் பெறுவதற்காகத் திட்டமிடப்பட்டு வருகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) About 15,000 numbers.

(*b*) About 50,000.

(*c*) Nil.

Births and deaths

* 225 Q.—Sri V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1955 முதல் 1957 வரையில் நமது ராஜ்யத்தில் வருடவாரியாக ஜில்லாவாரியாக எத்தனை குழந்தைகள் பிறந்தன ?

(ஆ) எத்தனை இறந்தன ? (5 வயதுக்கு உள்பட்டது).

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement[b] is placed on the table of the House.

[b] Printed as Appendix III on page 874 infra.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆர்க்காடு ஜில்லாவிலே, 1957-ம் ஆண்டிலே பிறந்த குழந்தைகள் 98,000 என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றுள் கால் பாகத்திற்கு மேல் இறந்து போயிருக்கிறது. மற்ற ஜில்லாகளைவிட இந்த ஜில்லாவில் மட்டும் இவ்வளவு குழந்தைகள் இறப்பதற்கு காரணம் என்ன ? அங்குள்ள பொருளாதார நிலைமையோ, அல்லது வறண்ட பிரதேசமாக இருப்பதோ—வட ஆர்க்காடு ஜில்லா உண்மையிலே ஒரு வறண்ட பிரதேசம்—காரணமா ? அல்லது அந்த ஜில்லாவில் சுகாதாரம் போன்ற விஷயத்தில் போதிய கவனம் செலுத்தப்படாததால் இவ்வளவு அதிகப்படியாக குழந்தைகள் இறந்திருக்கின்றனவா ? ஆகவே இதில் போதுமான கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை விஞ்ஞான முறையில் தான் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

SRI K. VINAYAKAM : From the statement placed on the table of the House it is evident that the powers of procreation are greater in North Arcot district (laughter) from which the Hon. Minister hails. Even from the Coimbatore district from which the Hon. the Finance Minister hails it is also the same. Am I to understand, Sir, that in spite of the great propaganda carried on for family planning, about which our Hon. Minister seems to be a fad, the powers of procreation in that district has not decreased.

MR. SPEAKER : The question is out of order.

Soil Conservation

* 226 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of trained personnel in the State in soil conservation work ; and

(*b*) the number of persons deputed by the State in 1957–58 to undergo training in soil conservation work ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 71.

(*b*) 27.

Madras City Tenants' Protection Act

* 227 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் எத்தனை நகராட்சிகளில் சென்னை நகர பகுதி மனை குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது ?

(ஆ) மேற்படி சட்டத்தை துரிதமாக்குவதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Madras City Tenants' Protection Act, 1921, has been extended to the Municipalities of Kumbakonam, Tanjore, Mayuram and Nagapattinam.